# THE LABOUR COURT, SALEM
# C.P.No.26 of 2022

**06.10.2025**

**RW1 – திருமதி. மாலதி**
**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை– (மனுதாரர் தரப்பில்)**

நான் தொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் வருங்கால வைப்புநிதி பிரிவில் பணியாற்றுகிறேன். நான் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேனா என்றால் நான் 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்காக சாட்சியம் அளிக்கிறேன். மனுதாரர் 07.12.1987ல் பயிற்சி நடத்துநராக பணியில் சேர்ந்தார். பயிற்சி நடத்துநர் என்பது அப்ரண்டிஸ் Act 1961படி பணிநியமணம் செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி பணியாளர் பிரிவில்தான் கேட்கவேண்டும். மனுதாரர் 28.02.2017 அன்று ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். பணிக்கொடை வழக்கு எண்.35/18ல் Ex.P6 உத்தரவுப்படி 29 ஆண்டுகள் பணித்தொடர்ச்சியுடன் மனுதாரருக்கு பணிக்கொடை கொடுக்க உத்தரவாகியுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

பணிக்கொடை மேல்முறையீட்டு வழக்கு எண்.20/20ல் Ex.P7 உத்தரவின்படி மனுதாரரின் பணிக்காலம் 29 ஆண்டுகள் என கீழமை நீதிமன்றம் சொன்ன உத்தரவு உறுதி செய்யப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு

சரிதான் என்கிறார். தொழிலாளர் நீதிமன்ற தீர்ப்பின்படி மனுதாரருக்கு பணி கொடுக்காமல் தாமதம் செய்வது நிர்வாகத்தின் தவறு என்றால் இல்லை.

(மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை மேலும் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem